**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – வடகிழக்கு பருவமழை – 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த அதிகனமழை காரணமாக – திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு – ஆணை வெளியிடப்படுகிறது.


---

**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,**
**பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.2 பிரிவு**

**அரசாணை (நிலை) எண்.600** நாள் 26.12.2023
சோபகிருது வருடம், மார்கழி 10
திருவள்ளுவர் ஆண்டு 2054

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.579, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 09.12.2023.
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீடு எண். 2585, நாள்: 21.12.2023.
3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (ம) மாநில நிவாரண ஆணையர் அவர்களின் கடித எண். இ.இ.1(2) / 1553 / 2023, நாள். 25.12.2023.

*****

**ஆணை:–**

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கடந்த 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில், வரலாறு காணாத அளவிற்கு அதிகன மழைப்பொழிவு ஏற்பட்டது. குறிப்பாக தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 94 செ.மீ, திருச்செந்தூர் 68.9 செ.மீ, ஸ்ரீவைகுண்டம் 62.1 செ.மீ, திருநெல்வேலி மாவட்டம் மூலக்கரைப்பட்டியில் 61.5 செ.மீ என்ற அளவிற்கு அதிகனமழைப்பொழிவு ஏற்பட்டது.

2. மேலும், திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை காலத்தில் பெறவேண்டிய சராசரி மழை அளவு 51.41 செ.மீட்டரில், 76% (39.12 செ.மீ) மழை ஓரே நாளில் பதிவாகியுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை காலத்தில் பெறவேண்டிய சராசரி மழை அளவு 44.19 செ.மீட்டரில், 86% (37.96 செ.மீ) மழை ஓரே நாளில் பதிவாகியுள்ளது. இந்த வரலாறு காணாத தொடர்

கனமழை காரணமாக, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் பல பகுதிகளில், வெள்ளநீர் சூழ்ந்து, வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து, பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயினர்.

3. திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் வரலாறு காணாத அளவிற்கு அதிகனமழைப் பொழிவு ஏற்பட்டதால், குடியிருப்பு பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு மேல் வெள்ள நீர் சூழ்ந்ததாலும் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததாலும், பொதுமக்கள் வீடுகளிலிருந்து வெளியே வரமுடியாமல் அவர்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதனால் பொதுமக்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து விட்டனர். மேலும், அவர்களது வீடுகளில் இருந்த துணிமணிகள் / பாத்திரங்கள் / வீட்டு உபயோகப் பொருட்கள் இழப்பு ஏற்பட்டது.

4. இதனைத் தொடர்ந்து, மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

i) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தி வெளியீட்டில், அதி கனமழையின் காரணமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்களில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.6000/– வழங்கப்படும் என்றும், இந்த மாவட்டங்களில் இதர வட்டங்களிலும் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு அங்குள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/– வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.

ii) அதன் அடிப்படையில் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகள் குறித்து திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்:–

(அ) <u>மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்கள்:</u>

<u>திருநெல்வேலி மாவட்டம் :</u>

திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சேரன்மகாதேவி மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் (முழுவதும்), இராதாபுரம் வட்டத்தில் லெவிஞ்சிபுரம், செட்டிகுளம், கூடங்குளம், விஜயாபதி மற்றும் திருவம்பலாபுரம் ஆகிய 5 வருவாய் கிராமங்கள் மற்றும் திசையன்விளை வட்டத்தில் திசையன்விளை, அப்புவிளை, உறுமன்குளம், கரைசுத்து புதூர், கரைசுத்து உவரி மற்றும் குட்டம் ஆகிய 6 வருவாய் கிராமங்கள்.

<u>தூத்துக்குடி மாவட்டம் :</u>

தூத்துக்குடி, திருவைகுண்டம், திருச்செந்தூர், ஏரல் மற்றும் சாத்தான்குளம் ஆகிய 5 வட்டங்கள் முழுவதும்.

ஆ) <u>வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள இதர வட்டங்கள்</u>

**திருநெல்வேலி மாவட்டம்**

மானூர், நாங்குநேரி வட்டங்கள் முழுவதும், இராதாபுரம், திசையன்விளை வட்டங்களில் **மேலே அ-வில்** குறிப்பிடப்பட்ட வருவாய் கிராமங்கள் நீங்கலாக உள்ள பிற வருவாய் கிராமங்கள் அனைத்தும்

**தூத்துக்குடி மாவட்டம்**

கோவில்பட்டி. விளாத்திக்குளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம் மற்றும் கயத்தார் ஆகிய 5 வட்டங்கள் முழுவதும்.

**கன்னியாகுமரி மாவட்டம்**

அனைத்து வட்டங்கள்

**தென்காசி மாவட்டம்**

அனைத்து வட்டங்கள்

iii) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, ரூ.6,000/- மற்றும் ரூ.1,000/- நிவாரணத் தொகை பெறக்கூடிய பயனாளர் குடும்பங்களின் எண்ணிக்கை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:-

**<u>அட்டவணை-1</u>**

**1) ரூ.6,000/- நிவாரணத் தொகை பெறக்கூடிய தோராயமான குடும்பங்களின் எண்ணிக்கை**

| வ. எண் | மாவட்டம் | வட்டம் (கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள வட்டங்கள்) | மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | ரூ.6,000/- நிவாரணம் பெற தகுதியான தோராயமான குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 1)திருநெல்வேலி,<br>2) பாளையங்கோட்டை<br>3) சேரன்மகாதேவி<br>4)அம்பாசமுத்திரம் ஆகிய வட்டங்கள் (முழுவதும்),<br>5)இராதாபுரம் வட்டத்தில் லெவிஞ்சிபுரம், செட்டிகுளம், கூடங்குளம், விஜயாபதி மற்றும் திருவம்பலாபுரம் ஆகிய 5 வருவாய் கிராமங்கள் மற்றும்<br>6) திசையன்விளை வட்டத்தில் திசையன்விளை, அப்புவிளை, உறுமன்குளம், கரைசுத்து புதூர், கரைசுத்து உவரி மற்றும் குட்டம் ஆகிய 6 வருவாய் கிராமங்கள். | 5,04,357 | 3,40,652 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தூத்துக்குடி | 1) தூத்துக்குடி<br>2) திருவைகுண்டம்<br>3) திருச்செந்தூர்,<br>4) ஏரல் மற்றும்<br>5) சாத்தான்குளம் ஆகிய வட்டங்கள் முழுவதும். | 5,37,825 | 3,23,108 |
| | மொத்தம் | | 10,42,182 | 6,63,760 |

<u>அட்டவணை-2</u>

**2) ரூ.1,000/- நிவாரணத் தொகை பெறக்கூடிய தோராயமான குடும்பங்களின் எண்ணிக்கை**

| வ. எண் | மாவட்டம் | பாதிக்கப்பட்ட வட்டங்கள் | மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | ரூ.1,000/- நிவாரணம் பெற தகுதியான தோராயமான குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி | 1) மானூர், 2) நாங்குநேரி வட்டங்கள் முழுவதும், 3)இராதாபுரம், 4)திசையன்விளை வட்டங்களில் மேலே அட்டவணை-1ல் குறிப்பிடப்பட்ட வருவாய் கிராமங்கள் நீங்கலாக உள்ள பிற வருவாய் கிராமங்கள் அனைத்தும் | 5,04,357 | 1,63,705 |
| 2 | தூத்துக்குடி | 1) கோவில்பட்டி<br>2) விளாத்திக்குளம்<br>3) எட்டயபுரம்<br>4) ஓட்டப்பிடாரம் மற்றும்<br>5) கயத்தார் ஆகிய வட்டங்கள் முழுவதும் | 5,37,825 | 2,14,717 |
| 3 | கன்னியாகுமரி | 1) அகஸ்தீஸ்வரம்<br>2) தோவாளை<br>3) கல்குளம்<br>4) திருவட்டார்<br>5) விளவங்கோடு மற்றும்<br>6) கிள்ளியூர் ஆகிய வட்டங்கள் முழுவதும் | 5,77,803 | 5,77,803 |
| 4 | தென்காசி | 1) ஆலங்குளம்<br>2) கடையநல்லூர்<br>3) சங்கரன்கோவில்<br>4) செங்கோட்டை<br>5) சிவகிரி<br>6) தென்காசி<br>7) திருவேங்கடம் மற்றும்<br>8) வீரகேரளம் புதூர் ஆகிய வட்டங்கள் முழுவதும் | 4,74,939 | 4,74,939 |
| | மொத்தம் | | 20,94,924 | 14,31,164 |

5. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் பின்வருமாறு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:-

i) திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வரலாறு காணாத அளவிற்கு அதி கனமழைப் பொழிவு ஏற்பட்டதால், மிகக் கடுமையாக வெள்ளம் சூழ்ந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு (மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டங்களில்) குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.6,000/- வீதம் நிவாரண நிதி வழங்க ரூ.398,25,60,000/- ஒதுக்கீடு செய்யவும்;

ii) மேலே குறிப்பிடப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏறத்தாழ 14,31,164 குடும்பங்களுக்கு (மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணை 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டங்களில்) குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.1,000/- வீதம் நிவாரண நிதி வழங்க ரூ.143,11,64,000/- ஒதுக்கீடு செய்யவும்;

iii) ஆக மொத்தம் ரூ.541,37,24,000/-ஐ (ரூபாய் ஐநூற்று நாற்பத்தொரு கோடி முப்பத்தேழு இலட்சத்து இருபத்து நான்காயிரம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யவும் கோரியுள்ளார்.

iv) மேலும், வரலாறு காணாத அதிகனமழைப் பொழிவு காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் சில பகுதிகளில் ATM மையங்கள் இயங்காததாலும், பயனாளர்களின் வங்கி கணக்கு எண்களை சேகரித்து நிவாரணம் வழங்க காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும் பாதிக்கப்பட்ட பலர் தங்களது ATM அட்டை, வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை இழந்திருக்கக்கூடும் என்பதாலும், அவர்களுக்கு உடனடியாக பயனளிக்கும் வகையில் இந்த நிவாரணத் தொகையினை நியாயவிலை கடைகள் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கிட ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்கவும் ஒப்புதல் அளிக்கவும்;

v) நிவாரணத் தொகையினை நியாய விலைக் கடைகள் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் தனியே வழிகாட்டுதல்கள் வெளியிடுமாறும்;

vi) கன மழை வெள்ளத்தினால் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் சேதமடைந்த குடிசைகளுக்கு நிவாரணத் தொகையாக கணக்கெடுப்பின் அடிப்படையில் தலா ரூ.10,000/- வழங்கவும்;

vii) திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிகக் கடுமையாக வெள்ள பாதிப்பு ஏற்பட்டு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு வெள்ள நிவாரணமாக 5 கிலோ அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கலாம் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

i) திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வரலாறு காணாத அளவிற்கு அதி கனமழைப் பொழிவு ஏற்பட்டதால், மிகக் கடுமையாக வெள்ளம் சூழ்ந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு (மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டங்களில்) குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.6,000/- வழங்கப்படும்.

ii) மேலே குறிப்பிடப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏறத்தாழ 14,31,164 குடும்பங்களுக்கு (மேலே பத்தி 4-ல் உள்ள அட்டவணை 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டங்களில்) குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.1,000/- வழங்கப்படும்.

iii) திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கனமழை வெள்ளத்தினால் சேதமடைந்த குடிசைகளுக்கு தலா ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) நிவாரணமாக வழங்கப்படும்.

iv) திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட/ இரண்டு நாட்களுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்து துணிமணிகள்/ பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் இழந்த தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு வெள்ள நிவாரணமாக 5 கிலோ அரிசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்கப்படும்.

7. மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையரின் பரிந்துரையின் அடிப்படையில், மாநில செயற்குழுவின் ஒப்புதலுடன் பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:-

i) மேலே பத்தி 6(i)-இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட

தோராயமாக 6,63,760 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.6,000/- வீதம் நிவாரண நிதி வழங்க ரூ.398,25,60,000/- ஒதுக்கீடு செய்யவும்;

ii) மேலே பத்தி 6(ii)-இல் குறிப்பிடப்பட்டுள்ள படி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள இதர வட்டங்கள் மற்றும் கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து வட்டங்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏறத்தாழ 14,31,164 குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் நிவாரணமாக ரூ.1,000/- வீதம் நிவாரண நிதி வழங்க ரூ.143,11,64,000/- ஒதுக்கீடு செய்யவும்;

iii) ஆக மொத்தமாக ரூ.541,37,24,000/-ஐ (ரூபாய் ஐநூற்று நாற்பத்தொரு கோடி முப்பத்தேழு இலட்சத்து இருபத்து நான்காயிரம் மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

iv) மேலும், வரலாறு காணாத அதிகனமழைப் பொழிவு காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் சில பகுதிகளில் ATM மையங்கள் இயங்காததாலும், பயனாளர்களின் வங்கி கணக்கு எண்களை சேகரித்து நிவாரணம் வழங்க காலதாமதம் ஆகும் என்பதாலும், மேலும் பாதிக்கப்பட்ட பலர் தங்களது ATM அட்டை, வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றை இழந்திருக்கக்கூடும் என்பதாலும், அவர்களுக்கு உடனடியாக பயனளிக்கும் வகையில் இந்த நிவாரணத் தொகையினை நியாயவிலை கடைகள் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கிட ஏதுவாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநருக்கு விடுவிக்கவும் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

v) நிவாரணத் தொகையினை நியாய விலைக் கடைகள் மூலம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அட்டை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் தனியே வழிகாட்டுதல்கள் வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

8. மேலே பத்தி 6 மற்றும் 7-இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கு, உரிய மேல் நடவடிக்கை எடுக்குமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2245 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 02 – வெள்ளம், புயல் முதலியவை – 101 – கருணை உதவி – மாநிலச் செலவினங்கள் – AE – வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொக்க உதவித் தொகை அளித்தல் – 356 – உணவளித்தல் ரொக்கத் தொகை – 01– உணவளித்தல் ரொக்கத்தொகை.

[IFHRMS த.தொ.கு.2245 02 101 AE 35601]".

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநருக்கு தொகையை விடுவிக்கும் பொருட்டு கீழ்காணும் கணக்குத் தலைப்பில் எதிர்வரவு வைக்கப்பட வேண்டும்:-

"K- வைப்பீடுகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் - 8443-00- உரிமையியல் வைப்பீடுகள் - 800 - ஏனைய வைப்பீடுகள் - BJ - தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் நிறுவன வைப்புகள்".

801- வரவுகள்-02- வட்டி பெறாதவை.
802- வழங்குதல் - 02 - வட்டி பெறாதவை
(த.தொ.கு: 8443-00-800-BJ 80102) - Receipts
(த.தொ.கு: 8443-00-800-BJ 80202) - Outgo

10. மேலே பத்தி-7 ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.541,37,24,000/-, 2023-2024-ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி 7-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை சரிகட்டல் மூலம் மேற்கொள்ள கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். இச்செலவினத்தை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கும் மற்றும் திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்/வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.4154/FS/P/2023, நாள் 26.12.2023 பெறப்பட்ட இசைவுடன், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1605 (ஆயிரத்து அறுநூற்று ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது. (IFHRMS ASL No.2023121605).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வே. ராஜாராமன்**
**அரசு செயலாளர்**

**பெறுநர்**

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் மற்றும்
மாநில நிவாரண ஆணையர், சேப்பாக்கம். சென்னை-5.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நீர்வளத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள்
துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், மருத்துவம்–மக்கள் நல்வாழ்வுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
உள் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
அரசு முதன்மைச் செயலாளர்,
பொதுப் பணித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
இயக்குநர், (பேரிடர் மேலாண்மை),
தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை–600 005.
ஆணையர், உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர்
பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–600 005.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
12, தம்புசாமி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை –600010.
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்,
என்.வி.நடராஜன் மாளிகை, கீழ்ப்பாக்கம், சென்னை –600010.
மாவட்ட ஆட்சியர்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி,
தென்காசி மற்றும் கன்னியாகுமரி.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை–600 008.
மாவட்ட கருவூல அலுவலர்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி,
தென்காசி மற்றும் கன்னியாகுமரி
முதன்மை மாநில கணக்காயர், சென்னை 600 018.

**நகல்**

வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைஅமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சரின் சிறப்பு நேர்முக
உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளரின் தனிச்செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
நிதி/(வருவாய்/வ.செ.பொ.1/வ.செ.பொ.2/வ.வ.I)த் துறை, சென்னை–600 009.
இ.கோ/உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

26/12/23

**பிரிவு அலுவலர்**